விலை: சதம் 75 ★★

# ஈழநாடு
THE EELANADU

மலர் 23 ஐப்பசி 6 ஜுல்ஹஜ் 23 இதழ் 250
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 22 10-1981

## இராணுவ உடையில் கொள்ளை முயற்சியாம்!
### உரும்பராயில் ஐவர் கைது

(யாழ்ப்பாணம்)

இராணுவ உடையில் கொள்ளையடிக்கத் திட்டமிட்ட ஒரு கோஷ்டியை, பொலிஸாரும் இராணுவத்தினரும் கூட்டாகக் கைது செய்தனர்!

இச்சம்பவம் உரும்பராயில் நேற்று முன்தினமிரவு நிகழ்ந்தது.

ஏழுபேர் கொண்ட கோஷ்டி உரும்பராயில் கொள்ளையடிக்கத் திட்டமிட்டிருப்பதாக யாழ். பொலிசாருக்கு தகவல் கிடைத்ததைத் தொடர்ந்து இராணுவத்துடன் சென்ற பொலிஸ் கோஷ்டி முத்திரைச்சந்தையில் வைத்து இக் கொள்ளைக் கோஷ்டியை மடக்கிப்பிடித்தது.

இவர்களில் ஐந்துபேர் கைது செய்யப்பட்டதாகவும், இருவர் தலைமறைவாகிவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கிருஷ்ணகுமார், விஜயகுமார், தர்மகுலசிங்கம், ரகுநாதன் உட்பட ஐந்துபேரே

(6-ம் பக்கம் பார்க்க)

## சங்கிலி அறுத்த இளைஞர்களை பொதுமக்கள் பிடித்தனர்

(காவலூர்)

வீதியில் வந்த பெண் ஒருவரின் 12 ஆயிரம் ரூபா பெறுமதியான சங்கிலியை அறுத்துக்கொண்டு ஓட முயற்சித்த இருவர் பொதுமக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு ஊர்காவத்துறை பொலிசில் ஒப்படைக்கப் பட்டனர்.

(6ம் பக்கம் பார்க்க)



# இலங்கை விஜயம் செய்த மகாராணிக்கு சரித்திர வரவேற்பு

## கொழும்பு மாநகரம் விழாக்கோலம்!

(நமது நிருபர் சு. மகாலிங்கசிவம்)

**மாட்சிமை தங்கிய இரண்டாவது எலிஸபெத் மகாராணியாரும், மேன்மை தங்கிய எடின்பரோ கோமகனும் பரிவாரத்தினரும் நேற்றுப் பிற்பகல் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் வந்திறங்கியபோது கோலாகல வரவேற்பு அளிக்கப்பட்டது.**

மகாராணியாரை அழைத்து வந்த றோயல் ஆஸ்திரேலிய ஏயர் லைன்ஸ் ஜெட் விமானம் நேற்றுப் பிற்பகல் சரியாக 3-55 மணிக்கு கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடைந்தது.

மகாராணியும் அவரது கணவரும் ஆஸ்திரேலிய விமானப் படையின் ஜெட் விமானத்தில் நேற்றுப் பிற்பகல் கட்டுநாயக்காவில் வந்திறங்கியபோது, சகல அரச மரியாதைகளுடன் இவர்கள் வரவேற்கப்பட்டனர். விமான நிலையத்திலிருந்து கொழும்பில் உள்ள ஜனாதிபதி மாளிகை வரை மகாராணியாரும் பரிவாரத்தினரும் ராஜபவனியில் அழைத்துவரப்பட்டனர்.

மங்கள பேரிகை முழங்க இருநாட்டு தேசிய கீதங்களும் இசைக்க இராணுவ, விமானப் படை மரியாதைகளும் அரசதம்பதிகளை, ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன தம்பதியரும், பிரதமர் திரு ஆர். பிரேமதாசா தம்பதியரும், முக்கிய அமைச்சர்களும் மற்றும் லண்டனிலுள்ள இலங்கைத்தூதர் திரு ஏ. ரி. மூர்த்தியும் இலங்கையிலுள்ள பிரிட்டிஷ் ஹைகமிஷனரும் எதிர்கொண்டு வரவேற்றனர்.

கட்டுநாயக்கா விமான நிலையத்திலிருந்து கொழும்பிலுள்ள ஜனாதிபதி மாளிகை வரையிலான பாதைநெடுகிலும் பல்லாயிரக்கணக்கான மக்களும் பாடசாலை சிறுவர்களும் திரண்டிருந்தனர். கட்டுநாயக்கா விமான நிலையம் மட்டுமல்ல கொழும்பு மாநகரமே விழாக்கோலம் பூண்டிருந்தது.

சரித்திரத்தின் சமீபகால வரலாற்றில் பெருந்திரளான மக்கள் இவ்விதமாக வீதியோரத்தில் குழுமிநின்று வரவேற்பு அளித்தது இதுவே முதற்தடவை என்று அவதானிகள் தெரிவித்தனர்.

நேற்றிரவு எட்டுமணியளவில் மகாராணியார், ஜனாதிபதியையும் பாரியாரையும் பின்னர் பிரதமரையும் பாரியாரையும் சந்தித்து அளவளாவினார்கள். இதனைத் தொடர்ந்து ஜனாதிபதியின் மாளிகைத் தோட்டத்தில் மகாராணியைக் கௌரவிக்கும் முகமாக ஜனாதிபதி விருந்துபசாரமளித்தார்.

இன்று காலை மகாராணிக்கு காலிமுகத்திடலில் பொது வரவேற்பு அளிக்கப்படும். இங்கு அவர் உரையாற்றுவார். மாலையில் கொழும்பு மாநகர சபை அளிக்கும் வரவேற்பிலும் மகாராணியார் உரையாற்றுவார்.

## துப்பாக்கி இளைஞர்கள் யாழ். வைமன் வீதியில் பகற்கொள்ளை!

(யாழ்ப்பாணம்)

தனித்துச்சென்ற இளம் தம்பதிகளிடமிருந்து பட்டப்பகலில் துப்பாக்கி இளைஞர்கள் நேற்றுத் தமது கைவரிசையைக் காட்டினர்.

நேற்றுப்பகல் சுமார் 1-30 மணியளவில் கணவனும் மனைவியுமாக வைமன் வீதியால் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபோது 4 இளைஞர்கள் டிரான்ஸ்போமருக்கு முன்பாக அவர்களை இடைமறித்துத் துப்பாக்கிகளைக்காட்டி அவர்களிடமிருந்து 4000 ரூபாவைக் கொள்ளையடித்துக் கொண்டு ஓடிவிட்டனராம்.

கொள்ளைக்குப்பயன்படுத்தப் பட்ட சைக்கிள்களும் கச்சேரியடியில் வைத்துப் பறிமுதல் செய்யப்பட்டது. இக் கொள்ளையடிக்கப்பட்ட சைக்கிள் என்று தெரியவருகிறது.

பணத்தைப் பறிகொடுத்த தம்பதிகளும் கச்சேரியைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ஆ)

## இராணுவ வீரர் மரணம்: தடயப் பொருட்கள் கொழும்பு அனுப்பப்பட்டன

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இராணுவ வீரர்கள் மரண விசாரணை நேற்று யாழ் நீதவான் திரு. ரி. ஜோகநாதன் முன்னிலையில் நடைபெற்றது.

பிரேத பரிசோதனை அறிக்கையையும், தடயப் பொருட்களையும் கொழும்பு இரசாயனப் பரிசோதகருக்கு அனுப்பி வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

மரண விசாரணை நாளை காலை வரை ஒத்திப்போடப்பட்டுள்ளது. மா

## ரயில் பிரயாணிகளுக்கு விசேட பஸ் சேவை

(யாழ்ப்பாணம்)

யாழ். பஸ் நிலையத்தில் கடந்த ஞாயிறன்று இடம்பெற்ற இராணுவ தாக்குதல் சம்பவத்தை அடுத்து செவ்வாய்க்கிழமை காலை 6 மணி முதல் மாலை 6 மணிவரை நடைபெற்ற பஸ்சேவை நேற்று மாலை 7 மணிவரை நடைபெற்றது இன்றும் காலை 5மணி முதல் மாலை 7மணிவரை பஸ் சேவை நடைபெறும் என்றும் வடபிராந்திய போக்குவரத்துச் சபை அதிகாரிஒருவர் தெரிவித்தார்.

இதேவேளையில் கொழும்பிலிருந்து பகல் யாழ் தேவியில் வரும் பிரயாணிகள் வசதியை முன்னிட்டு யாழ். ரயில் நிலையத்திலிருந்து குடாநாட்டின் முக்கிய பாதைகளில் சேவை நடைபெறும் என்றும் அந்த அதிகாரி கூறினார்.

நிலைமை சீரடையும் பட்சத்தில் இன்னும் ஒரிரு தினங்களில் வழமைபோல் பஸ்சேவைகள் நடைபெறும் என்றும் அவர் கூறினார். (ஆ)

## விசாரணைக்காக சென்றவர் பொலிஸ் நிலையத்தில் மரணம்

(மன்னார்)

பொலிஸ் விசாரணைக்காக பொலிசாரால் கூட்டிச் செல்லப்பட்ட நபர்ஒருவர்பொலிஸ் நிலையத்தைச் சென்றடைந்ததும் மயக்கமடைந்து மரணமானார்.

முருங்கனில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் 3பிள்ளைகளின் தந்தையான ரி வரதராசா (வயது 36) என்பவரே இவ்வாறு மரணமானவராவார்

மரணமானவரின் சகோதரர் ரி. கனகலிங்கம் என்பவருக்கும், வேறு சிலருக்குமிடையில் சச்சரவு ஏற்பட்டு பொலிசாரின் விசாரணையையடுத்து ரி. கனகலிங்கம் பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந்தார். பிணையில் விடுதலை செய்யப்பட்ட ரி. கனகலிங்கமும், அவரது சகோதரரும், மரணமானவருமான ரி. வரதராசாவும் சேர்ந்து ரி. கனகலிங்கத்திற்கு எதிராகச் சாட்சியமளித்தவர்களைத் தாக்கினார்களாம். இச் சம்பவம்பற்றி தாக்குதலுக்குள்ளானவர்கள் முருங்கன் பொலிசில் புகார் செய்ததையடுத்து முருங்கன் பொலிசார் மரணமானவரான ரி. வரதராசாவை கைதுசெய்து விசாரணைக்காகப் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச்சென்றனர். பொலிஸ் நிலையத்தைச் சென்றடைந்ததும் ரி. வரதராசா திடீரென மயக்கமடைந்து கீழே விழுந்து மரணமானார் என்று தெரிவிக்கப்பட்டது.

## தணிக்கை

பொதுசன பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அரசாங்கத்தினால் கொண்டுவரப்பட்ட பத்திரிகைத் தணிக்கை அமுலில் உள்ளது.

## முதலாவது சந்தேகநபர் அடையாளம் காட்டப்பட்டார்

யாழ்ப்பாணம்

நீர்வேலி கொலை, கொள்ளை தொடர்பான அடையாள அணிவகுப்பில் முதலாவது சந்தேக நபரான இ பாலசிங்கம் அல்லது சின்னவன் இரு சாட்சிகளால் அடையாளம் காணப்பட்டார்.

யாழ் பதில் நீதவான் திரு. கனகரத்தினம் கேசவன் முன்னிலையில் யாழ் நீதிமன்றத்தில் அடையாள அணி வகுப்பு நடைபெற்றது.

(6ம் பக்கம் பார்க்க)

கொழும்பு தொலைக்காட்சி சேவை எப்போது என ஏங்குவோருக்கு
ஓர் நற்செய்தி
கொழும்பு பரீட்சார்த்த சேவை
உங்கள் TV ஏரியலை சென்னை தொலைக்காட்சிக்கு வைக்கும் திசைக்கு நேர் எதிராக மாற்றுவதன் மூலம் சனல் 5 (CHANNEL-5)ல் வர்ணக்காட்சி காணலாம்.
விபரங்களுக்கு;
V. K. இராசரத்தினம்
95, ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்
1273

# பத்திரிகா தர்மத்தை நிலைநாட்ட உழைத்தவர்

## கே. பி. ஹரன் மறைவுக்கு அஞ்சலி

[சாவகச்சேரி]

"ஈழநாடு பத்திரிகையின் ஆரம்பகால ஆசிரியராகத் திகழ்ந்த அமரர் கே. பி. ஹரன் ஈழநாடு முன்னேற்றத்திற்கும், அதன் தனித்துவத்திற்கும், பத்திரிகா தர்மத்திற்கும் அயராது உழைத்த உத்தமராவர். இவர் சென்னையில் மறைந்தாலும் இலங்கைவாழ் தமிழ் மக்களின் உள்ளத்தில் நிறைந்த சீலராவர்."

தென்மராட்சி முத்தமிழ் மன்றம் நடத்திய அஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றிய ஆசிரியமணி ஆர். ரி. சுப்பிரமணியம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அதிபர் திரு. அ. பொ. செல்லையா தலைமையில் நடந்த அஞ்சலிக் கூட்டத்தில் திரு. ஆர். ரி. சுப்பிரமணியம் தொடர்ந்து பேசுகையில் "திருமுறையின் உட்பொருளையும், தத்துவார்த்தங்களையும் ஐயாறன் என்ற புனைபெயரில் எழுதிப் புனித சைவ உலகம் ஒன்றைச் சிருஷ்டித்த நவீன பிரம தேவராவர்.

"எங்கள் மன்றத்தின் விசேட நிகழ்ச்சிகளிலும், மீசாலைத் தமிழிசைச் சங்க விழாவிலும், வாடகை வீடு போன்ற நாடகங்களிலும் சிறப்புச் சொற்பொழிவாற்றித் தென்மராட்சி மக்களின் தனியிடம்பெற்ற பெருமைக்குரியவருக்கு எமது அஞ்சலி" என்றார்.

திருவாளர்கள் செவ்வந்தி மாலிங்கம், அ. ஆறுமுகம் உட்படப் பலர் அஞ்சலி உரை நிகழ்த்தினர்.

### சுழிபுரத்தில்

(சுழிபுரம்)

"இறையருளுடன் பத்திரிகைத்துறையில் உழைத்துவந்த திரு. கே. பி. ஹரன் தினமும் ஒரு தேவாரத்தை ஐயாறன் பகுதியில் மிகவும் பொருத்தமான இடத்தில் புகுத்தி எழுதி சமயத் தொண்டு செய்துவந்தார். யாரையும் நோகாது எழுதுவதில் இவர் வல்லவர். இவர் வழக்கம்பரை அம்மன் கோவிலில் நடைபெற்ற பல வைபவங்களில் கலந்து சிறப்பித்தார்".

இவ்வாறு வழக்கம்பரை சன

(5ம் பக்கம் பார்க்க)

# மிருசுவில் கொலைவழக்கு எதிரிகள் பிணையில் செல்ல அனுமதி!

(சாவகச்சேரி)

மிருசுவில் கொலைவழக்கில் எதிரிகளான பொ. தர்மலிங்கம், செ. தவராசா ஆகியோர் தலா 2500 ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

யாழ் மேல் நீதிமன்றத்தில் நீதிபதி தெத்திகம முன்னிலையில் இப்பிணை மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

காங்கேசன் துறை சிமெந்து கூட்டுத்தாபன லொறிச் சாரதியான செ. விஜயரத்தினம் கொலை தொடர்பாக எதிரிகள் றிமாண்டில் வைக்கப்பட்டிருந்தனர்.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி எம். சிவலோகநாதன் சட்டத்தரணி என். சுரேந்திரன் அனுசரணையுடன் ஆஜரானார். (ஈ)

# இன்றைய பலன்

ஐப்பசி மாதம் 6-ம் திகதி

வியாழக்கிழமை

(22 - 10 - 81)

மேடம்: நீண்டநாள் எதிரிகள் இன்று மீண்டும் நண்பர்களாவார்கள். பொதுப்பணி மூலம் புகழுக்கும் இடமுண்டு. தொழில் துறையில் இடமாற்றம் ஏற்படலாம். திருப்தியான தினம்.

இடபம்: அறவழியில் நாட்டம் செல்லும் வேதாந்த சித்தனைகள் தலைதூக்கும் இரக்க சித்தையின் மூலம்செலவுண்டு. கற்ற மனிதர்களின் வாழ்த்து கண்டிப்பாக கிடைக்கும்.

மிதுனம்: அதிஷ்டகரமான தினம். இலர் வாழ்க்கையில் திரவிய இலாபத்துக்கும் இடம் உண்டு. மனை வாழ்வில் மகிழ்ச்சி தென்படும். வீட்டில் சுப காரியமொன்று இடம்பெறலாம்.

கடகம்: சிந்தனையில் தாக்குதலால் உடல் நிலைபாதிக்கும். மனதில் அமைதிகுன்றும். திடீர் முடிவுகளைத் தவிர்த்துக் கொள்ளவும். தொழில்துறையில் தொல்லைகளுக்கு இடமுண்டு.

சிங்கம்: குறுக்குவழியில் இறங்குவதால் சட்டத்தின் பிடியில் மாட்டிக்கொள்ளக் கூடும். நிரமமுறையில் உங்கள் நடவடிக்கைகள் கவனிக்கப்படும்.

கன்னி: மனம் நிறைந்த சம்பவங்கள் இடம் பெறும் பெரியோர்களின் ஆசி தாராளமாக கிடைக்கும். கைவிடப்பட்ட பணவரவு மீண்டும் கிடைப்பதற்கு இடமுண்டு.

துலாம்: உறவுமுறைகளில் பிளவு தென்படலாம். மனதில் உற்சாகங்குன்றும் அபாயகரமான காரியங்களில் ஈடுபடாதிருக்கவும்.

விருச்சிகம்: ஆராய்ச்சியில் அதிக ஆர்வம் தோன்றும். வாகனத்தின் மூலம் அதிக பொருள் வரவுக்கு இடமுண்டு, வீண் பொருள் வரவுக்கு இடமுண்டு. வீண் பொருள் விரயமும் வியாபாரத்தில் முன்னேற்றம் காணப்படும்.

தனு: புரட்சிகரமான மாறுதல்களை விரும்புவீர்கள் வாழ்க்கையில் எதிர் நீச்சல் போடுவதில் அதிக ஆர்வம் பிறக்கும் உங்கள் முன்னேற்றத்துக்குப் பெரியோர் ஆதரவு கொடுப்பர்.

மகரம்: மனக் கவலைகளுக்கும் இடமளிப்பீர்கள் கடமையில் தடையேற்படும் மேலதிகாரிகளைத் தவிர்த்துக் கொள்ளவும். மதுபானத்தை தவிர்க்கவும்.

கும்பம்: குடும்பத்தில் குதூகல நிகழ்ச்சிகள் இடம்பெறும். வெளியிடத்திலிருந்து மகிழ்ச்சிகரமான செய்தியொன்று கிடைக்கும். பணவரவுக்கு இடமுண்டு.

மீனம்: நிலவின் நிழலாட்டம் நிம்மதியைச்சிதறடிக்கும். உறவினர்களின் மத்தியில் பூசல்கள் தலைதூக்கும் அக்னி பரிகள் தொடர்புகள் இக்கலை தோற்றுவிக்கும்

சோதிட கலாநிதி

திருமலை க. வேலுப்பிள்ளை

# வரி விளம்பரம்

விற்பனைக்கு

நயினாதீவு 5A வட்டாரத்தில் செய் பயிர்களுடன் 15பரப்புக்காணியும் வீடும் வீடிக்காமல் பிரித்து 9 பரப்பும், 3-ம் வட்டாரத்தில் பச்சிளிக்குண்டு நெற்பரப்பு 5ம், 7ம் வட்டாரத்தில் கலடு நிலப் பரப்பு 2½யையும் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு:- க. வேலுப்பிள்ளை சாந்தி லொட்ஜ் யாழ்ப்பாணம்.

1271

யாழ்ப்பாண
மாநகராட்சி மன்றம்
1982-ம் ஆண்டிற்கான

## வழங்குனர்களைப் பதிவு செய்தல்

மாநகராட்சிப்பகுதி வேலைகளுக்குத் தேவையான பொருட்களை (கிறசர் கல்லிகள், சையிலைக் உடைத்த சல்லிகள், கண்டகல், சுண்ணாம்பு, தேங்காய் பட்டைக்குகு, கிறசர் தூள், கிறவல், மக்கி, மணல்) வழங்குவதற்கு தகுதியுடைய வழங்குனர்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பம் அனுப்பப்படும் உறையில் இடது பக்க மேல் மூலையில் "1982-ம் ஆண்டுக்கு மாநகரப் பொருட்கள் வழங்குனர் பதிவு" எனக் குறிப்பிடப்பட்டு மாநகர ஆணையாளருக்கு அனுப்பப்படல் வேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதி; 6-11-1981.

சீ. வி. கே. சிவஞானம்,
மாநகராட்சி மன்ற
ஆணையாளர்.

வேம்படி,
மாநகர சபை,
யாழ்ப்பாணம்,
15-10-1981. (1272)

# யாழ்ப்பாணம் அபிவிருத்திச் சபை

நல்லூர் உப அலுவலக

## கேள்வி அறிவித்தல்

திருநெல்வேலி மாதிரிச் சந்தையின் கீழ் மாடியிலுள்ள பலாலி வீதிப்பக்கமாகவுள்ள

ஏ 8-ம் இல. கடைக்கு

சீலிடப்பட்ட முத்திரையிடப்பட்ட கேள்வி

30-10-81-ந் திகதி காலை 10-00 மணி வரை

என்னுல் கோரப்படுகின்றன.

யாழ். அபிவிருத்திச்சபை நல்லூர் உப காரியாலயத்தில் கேள்விப்பத்திரப்பணமாக ரூபா 25/-ம் மீளளிக்கக்கூடிய பிணைப்பணமாக ரூபா 2000/-மும் கட்டுவதன் பேரில்

29-10-81-ந் திகதி நண்பகல் 12-00 மணி வரை

வழங்கப்படும் கேள்விப்பத்திரங்களில் விண்ணப்பிக்கவேண்டும்.

கடை வழங்குதல் மாத வாடகைக்கு மேலாக கடையைப் பெறுவதற்காகக் கேட்கப்படும் கூடுதல் உரிமைப்பண அடிப்படையிலேயே தெரிவுமிமை வழங்கப்படும்.

பிரதிச் செயலாளர்,

**யாழ். அபிவிருத்திச் சபை.**

நிதிக்கிளை,
யாழ். அபிவிருத்திச் சபை,
யாழ்ப்பாணம்,
15-10-1981. (1270)

## பாவனையாளர் சங்கம்

(நீர்வேலி)

நீர்வேலி பாவனையாளர் சங்கத்தின் நடப்பு வருட நிர்வாகிகள் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் க. ச. பாலசுப்பிரமணியம், உபதலைவர் த. வேலுப்பிள்ளை செயலாளர் ம. க. நடராசா உபசெயலாளர் க. இராசதுரை, பொருளாளர் த. குணநாயகம் நிர்வாகக் குழுவினர் கி, இராசையா. டி. வை. வியாகேசர், க. பசுபதி செல்வி அருணாசலம் சாவித்திரி.

## ஆரோக்கியமாதா திருவிழா

(யாழ்ப்பாணம்)

அஞ்சனந்தாழ்வ புனித ஆரோக்கிய அன்னையின் திருவிழா இன்று வியாழக்கிழமை ஆரம்பமாகி ஞாயிற்றுக்கிழமை காலை பலிப்பூசை முடிந்ததும் திருச்சுருபப் பவனியுடன் முடிவடையும்.

விளையாட்டு மைதானம்:

## நிதி ஒதுக்கீடு

(பண்டத்தரிப்பு)

அராலி சரஸ்வதி மகாவித்தியாலயத்தில் விளையாட்டு மைதானம் அமைப்பதற்கு காணியொன்றை பெற்றுக் கொள்வதற்காக வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. திருநாவுக்கரசு 50 ஆயிரம் ரூபாவை இவ்வருட பன்முகப் படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தின்கீழ் ஒதுக்கீடு செய்துள்ளார். (ஈ)

## கவிஞருக்கு அனுதாபம்

(சுழிபுரம்)

'அர்த்தமுள்ள இந்துமதம்' நூல் உள்ளவரை மறைந்த கவிஞர் கண்ணதாசனை எம் மறக்கமுடியாது' கவிஞர் வாழ்ந்த காலத்தில் நாமும் வாழும் வாய்ப்புக் கிடைத்தது ஓர் பெரும் பாக்கியமாகும். கவிஞர் தந்த பாடல்கள் இனம் உள்ளங்களில் நிலையான இடத்தைப் பெற்றுள்ளதை யாவரும் நன்கு அறிவர். இவரது மறைவு எமக்கு ஈடுசெய்யமுடியாத பெரும் கஷ்டமாகும்.

இவ்வாறு வழக்கம்பரை தமிழ்மன்றத்தினர் கவிஞர் கண்ணதாசன் மறைவையொட்டி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளனர். கவிஞரின் குடும்பத்தினருக்கு ஓர் அனுதாபச் செய்தியையும் இவர்கள் அனுப்பிவைத்துள்ளனர்.


## மீன்பிடித்துறையும் அணுகு வீதியும்

(ஆக்கைப்பிட்டி)

மண்டைதீவு கிழக்குக் கடற்கரையில் கடற்றொழிலாளரின் வசதிக்காகவும், துறைமுகம் ஒன்றும், அணுகு வீதி ஒன்றும் அமைக்கப்படவுள்ளது. இதற்கான நிதி 15,000 ரூபாவும் ஏற்கனவே ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினத்தினால் பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வேலை மதிப்பீடுகளும் தயாரிக்கப்பட்டுள்ளமையினால் கூடிய விரைவில் இவ்வேலை ஆரம்பிக்கப் படவுள்ளதாக எதிர்பார்க்கப் படுகிறது. (ஈ)


CENTRIC

செண்ட்றிக் விவசாய பம்ப்.



● உலகப் புகழ் றுபின் பெட்ரல்/மண்ணெண்ணெய் அல்லது யன்மார் டீசல் எஞ்சின் பொருத்தியது.
● நிகர் நிற்க முடியாத எரிபொருட் சிக்கனம். தனித்துவமான தன்னியக்க எரி பொருள் மாற்றும் விசை.
● இடம் மாற்றும் வசதி கொண்ட பாரம் குறைந்தது.
● நிலைத்து நிற்பதற்காக வார்ப்பிரும்பிலும் பித்தளையிலும் உருவானது.
● செண்ட்றிக் - 30 வருடங்களுக்கு மேல் 60,000 பேர் நம்பிப் பாவிப்பது.

விலை: ரூ. 4,750/- முதல்.
1½'', 2'', 3'', 4'' ரகங்களில் கிடைக்கும்.

Mel Ads

ஜினசேன லிமிட்டெட்,
4, உணுப்பிட்டியா வீதி,
கொழும்பு 2.
தொலைபேசி: 26558/9

### மணிவாக்கு

அசட்டுத்தனமான வீண் கேள்விகளைத் தவிர்த்து விடு. அவை சச்சரவுகளையே பிறப்பிக்கின்றன.

—பைபிள்

# நமது நோக்கு

## இருவேறு உலகம்

### ஈரான்

ஈரானில் இன்றுவரைக்கும் நடக்கும் இஸ்லாமியப் புரட்சி ஆட்சி பிசுபிசுத்துப் போகுமென்ற சந்தேகம் எழுந்திருக்கிறது.

இஸ்லாமியப் புரட்சித் தலைவர் எந்தச் சந்தர்ப்பத்திலும் இவ்வித சந்தேகத்துக்கு இடமளிக்கவில்லை.

அவருடைய ஆசியின் கீழ் சுமார் மூன்று வருடங்களாக இன்று வரைக்கும் மூவாயிரத்து முந்நூற்றைம்பது பேர் சுட்டுக் கொல்லப்பட்டனரென்று லண்டனில் அமைக்கப்பட்டிருக்கும் சர்வதேச மன்னிப்புச் சங்கம் தெரிவித்திருக்கிறது.

இச்சங்கம் ஈரானின் தலைநகரான தெஹ்ரான் சிறைச்சாலைகளில் நிறைந்திருக்கும் கைதிகளை பார்வையிட ஆட்சியைக் கேட்டிருக்கிறது. ஈராக் யுத்தத்தையும் இடதுசாரி முஜஹதீன் இஸ்லாமிய இயக்கத்தையும் கண்டித்து அறிக்கை விடுத்தால் சர்வதேச மன்னிப்புச் சங்கத்தின் கோரிக்கையை ஏற்றுக் கொள்ளலாமென்று ஈரான் தெரிவித்திருக்கிறது.

இது நடக்குமாவென்பது வாசகர்கள் யூகித்தறிய வேண்டியது.

ஈரானில் இடம்பெற்ற கோரச் சம்பவங்கள்-தெருச் சண்டைகளில் நடைபெற்ற பயங்கரவாதக் கொலைகள் - இளம் பிள்ளைகள் உட்படப் பல ராணுவ வீரர்கள் அரசியல் தலைவர்கள், மதத் தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், ஜனாதிபதி, பிரதமர் போன்ற பெரும் 'புள்ளிகள்' குண்டுவெடிப்பு, துப்பாக்கிச்சூடு, மர்ம விபத்து - இவை போன்ற பலவேறு வகைகளில் கொல்லப்பட்டது - இந்த அரசு இரத்தம் சிந்திக்கொண்டே போகிறதென்பதைத் தெளிவாக நிரூபிக்கிறது.

அரசியல் எதிரிகளை ஒழித்துக்கட்டப் பிறப்பிக்கும் உத்தரவுகள் பிரயாணச் சீட்டுகள்போல் சர்வசாதாரணம்!

கொடுங்கோல் ஆட்சியென்று கருதப்படும் மதத் தலைவர் கொமேனியின் ஆதரவு பெற்ற ஆட்சிக்கெதிராக கொரில்லா யுத்தம் உள்நாட்டில் வளர்ச்சி பெறுகிறது. பாரிஸ் மாநகரில் இன்றைய ஈரான் ஆட்சிக்குப்போட்டியாக 'தேசிய எதிர்ப்பு மன்றம்' ஒன்று உருவாகி வலுப்பெற்று வருகின்றது. இன்றைய புரட்சி ஆட்சியும் அதன் கொடுங்கோன்மையும் விரைவில் முடிவடையுமெனக் கருத இடமுண்டு.

கெரில்லாத் தலைவர் ராஜாவி தலைமையில் வெளியேறிய முன்னாள் ஜனாதிபதி பனிசதார் ஆதரவுடன் பாரிஸ் மாநகரில் ஒரு தற்காலிக ஆட்சி அமைப்பை நிறுவி பத்து அம்சக்கோரிக்கையை இம்மன்றத்தினர் வெளியிட்டிருக்கின்றனர்.

சுதந்திர தேர்தல் முறை, கருத்துச் சுதந்திரம் அணி சேராக்கொள்கை ஆண்-பெண் சமத்துவம் தனியார் தொழில் உரிமை, போன்ற அம்சங்கள் இத்திட்டத்தில் முக்கியமென்று கருதப்படுகின்றது.

எதிர்ப்புரட்சியென்று கருதப்படும் இந்த இயக்கம் வெற்றிபெறும் என்ற நம்பிக்கை கொண்ட கொரில்லாத் தலைவர் "மாதங்கள் எடுக்காது, சில வாரங்களே" என்று நம்பிக்கை கொண்டிருக்கிறார்.

எது எவ்வாறாலும் இன்று ஈரானில் மதத்தின் பேரில் நாம் காணும் இரத்தக் களரியும் உயிர்க்கொலையும் மனிதாபிமானத்துக்குச் செருப்படியென்றே கருத வேண்டும்.

### பிரான்ஸ்

ஈரானைப் போன்ற மேற்கு ஆசிய நாடுகளின் இன்றைய வரலாறு மதத்தின் பேரில் இரத்தத்தால் எழுதப்படவேண்டியது.

இதற்கு நேர்மாறாக பிரான்ஸில் ஆட்சிக்கு வந்த புதிய சோஷலிசக் கட்சி எவ்வாறு தொழிற்படுகின்றது என்பதைப் பார்ப்போம்:

ஐரோப்பாவில் ஏற்பட்ட முதல் இரத்தப் புரட்சி பிரெஞ்சுப் புரட்சியாகும். அரச தம்பதிகள் தொடக்கம் புரட்சிக்கெதிரானவர்களை வரும் தூக்கிலிடப்பட்டார்கள்.

நாகரிக முறையில் 1789ல் அமைக்கப்பட்ட தூக்கு மரம் 1977 வரைக்கும் பணிபுரிந்து வந்திருக்கிறது. கடந்த 12 வருடங்களில் எட்டுப்பேரை மட்டும் விண்ணுலகுக்கு அனுப்பி வைத்தது.

"என்னுடைய இதயத்தின் அடியிலிருந்து எழும் எதிர்ப்பு மனித கொலைக்கெதிரான ஆழமான உணர்வின் விளைவு!" என்று ஆணித்தரமாக எடுத்து விளக்குகிறார் பிரான்ஸின் சோஷலிச ஜனாதிபதி மிற்றரான்ட்.

அதிபாரிக்கும் குற்றங்களுக்கு மரண தண்டனை அவசியம் சட்டப் புத்தகத்தில் இருக்கவேண்டுமெனப் பெரும்பான்மை பிரெஞ்சு மக்கள் விரும்புகின்றனர். இருந்தும் 290 சோஷலிச அங்கத்தவர்களும் 40 கம்யூனிஸ்ட்டுக்களும் உள்ள 491 பேர் கொண்ட பிரெஞ்சுப் பிரதிநிதிகள் சபையில் ஜனாதிபதியின் கொள்கை வெற்றிபெற்றிருக்கிறது.

"மரணதண்டனை நீக்கப்பட்டுள்ளது; அந்த இடத்தில் ஆயுட்கால சிறை அமுலுக்கு வருகின்றது."

இவ்விரு வசனங்களும் சோஷலிச, மனிதாபிமான ஆட்சிகளின் முதற் பெரு வெற்றியெனக் கொள்ளலாம்.

பாரிஸ் நகரிலிருந்திருந்த ஆட்சி அதிகம் பரவலாக்கப்படுதல். பல்கலைக்கழக நிர்வாகத்தில் மாணவர்களுக்குரிய பங்கு. வேலையின்மைக்கெதிரான நடவடிக்கைகள், சிறு கைத்தொழில்களுக்கு ஊக்கம். தனியார் துறையில் 150,000 புதிய வேலைகள், போன்ற ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் முற்போக்கு ஆட்சியின் தொடர்பான திட்டங்களாகும்.

வங்கிகள் போன்ற பெரிய ஸ்தாபனங்கள் தீவிரமுறையில் தேசியமயமாக்கப்பட மாட்டாவென்று ஆட்சியின் எதிரிகளின் அச்சத்தையும் நீக்க மிற்றரான்ட் கையாளும் விவேக அரசியல் திட்டங்கள் உதவுகின்றன.

பழைய உளுத்துப் போகின்ற டிகால் கொள்கை ஆட்சியினர் அரசுக்கெதிராகக் கொண்டுவந்த நம்பிக்கையில்லாப்பிரேரணை தவிடுபொடியாய்விட்டது.

இடதுசாரி ஆட்சி நிலைக்குமானால் ஏழு வருடங்களில் பிரான்ஸ் உலகுக்கே ஒரு கலங்கரை வெளிச்சமாகும்.

# சித்திரத்துத்தாமரையான்

**பி. எஸ். செட்டியார்**

திரு பி. எஸ். செட்டியார் ஒரு முதிர்ந்த பத்திரிகையாளர் ஆசிரியர் ஹரனின் கீழ் பணியாற்றியவர் இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதரகத்துத் தகவல் பிரிவில் உயர் பதவி வகித்துத் தற்போது ஓய்வு பெற்றுள்ளார். ஆசிரியர் ஹரனின் பண்பு பற்றி இங்கு அவர் எழுதுகிறார்.

"பத்திரிகைத் துறையின் புனிதத்தன்மையைப் பேணியவர் கே. பி. ஹரன்" என்ற ஈழநாடு தலையங்கமே அவருடைய சமாதியில் பொறிக்கப்படவேண்டிய பொருத்தமான வாசகமாகும்.

பத்திரிகைத்துறையில் அவருடன் பல வருடங்களாகப் பழகிய என்னுடைய சொந்த அனுபவம் இது. 'வீரகேசரி'யின் பிரதம ஆசிரியராக அவர் கடமையாற்றிய பொழுது சுமார் இருவருடங்கள் அவரின் கீழ் பணியாற்றினேன். உணர்ச்சியும் துடிப்பும்மிக்க உதவி ஆசிரியர்கள் எழுதும் தலையங்கங்கள், மொழிபெயர்ப்புகள், விமர்சனங்களை யெல்லாம் கழுகுக்கண்ணுடன் பார்வையிட்டுத் திருத்தங்கள் செய்வார். உண்மைக்கு மாறாகத் திரித்துக்கூறும் தலையங்கங்கள், சொல்லடுக்கு நவீன பாணிக்காக உண்மைக்கு மேலதிகமாக எழுதப்படும் வசனங்களையெல்லாம் கண்டிப்பார். பத்திரிகைகள், சஞ்சிகைகளில் வரும் ஆபாசப் படங்கள், வார்த்தைகளைக் காணநேரிட்டால் 'அடராம! ராமா!' என்று நெற்றியில், சீத்தலைச் சாத்தனார் எழுத்தாணியால் தலையில் குத்திக் கொள்வது போல், அடித்துக்கொள்வார்.

என்னைப்போன்ற இளம் ஆசிரியர்களுக்கு திரு. ஹரனின் 'பச்சைத் தண்ணி'ப் பத்திரிகைத் தொழில் பிடிப்பதில்லை. எமது உற்சாகத்தையும் உணர்ச்சிகளையும் அடிவாளம் போட்டு கட்டுப்படுத்திவிடுகிறாரே என்று எமக்குள்ளே பேசிக்கொள்வோம். இது அவருக்கும் தெரியாமலில்லை. சில சமயங்களில் என்னைத் தனியாகத் தன் அறைக்குள் அழைத்து, "மிஸ்டர் செட்டியார்! உங்கள் உணர்ச்சியைக் கட்டு மீறிப்போக இடங்கொடாதீர்கள்! அறிவின் வாய்க்காலில் அதன் வரம்புக்குள் உணர்ச்சியை ஓடச் செய்யுங்கள்.

அப்பொழுதுதான் நீங்கள் ஒரு சிறந்த பொறுப்புள்ள பத்திராசிரியனாக வரமுடியும். நீங்கள் எழுதும் ஒவ்வொரு வசனமும் கருத்தும் எத்தனையோ மக்களைப் பாதிக்கும். அவர்களை நல்லவழியில் இட்டுச்செல்வதும் தீயவழியில் போகத் தூண்டுவதும் உங்கள் பேனா முனையில் தங்கியிருக்கிறது" என்று அடிக்கடி சொல்லுவார். வகுப்புக் கலவரங்களும் பதற்ற நிலைமையும் அன்றாட வாழ்க்கை முறையாக அமைந்துள்ள இன்றைய சூழ்நிலையில் அவரது அறிவுரை இன்றைய பத்திரிகையாளருக்கு எவ்வளவு தேவைப்படு

[6-ம் பக்கம் பார்க்க]

## தமிழ்வேதம்

'தமிழ்வேதம்' என்ற கட்டுரை, இந்து சாதனத்திலும் புத்தகவடிவிலும் படித்த போது, ஏறக்குறைய அறுபது வருஷத்துக்குமுன் கேள்விப்பட்ட ஒரு சம்பவம் நினைவுக்கு வந்தது.

நாவலர் அவர்கள் வித்தியாசாலையில் படித்துக்கொண்டிருக்கும் போது, அடிக்கடி கேள்விப்பட்டது. இப்பொழுது நினைவுக்கு வருகின்ற அந்தச் சம்பவம்.

வைத்தியலிங்கம்உபாத்தியாயர் என்பவர் பற்றியது அந்தச் சம்பவம். உபாத்தியாயர் நாவலர் அவர்களிடம் படித்தவராய், நாவலர் வித்தியாசாலையில் படிப்பித்தவராயிருக்கலாம்.

உபாத்தியாயர், உள்ளும் புறமும் புனிதர். சமயாசாரசீலர். திருமுறைகளில் நல்ல பயிற்சி உள்ளவர். இனியகுரல். தமிழ்வேதத்தை உரிய பண்ணில், ஏற்ற ராகத்தில் ஓதும் ஆற்றல் படைத்தவர்.

கோயில்களிலும், சைவசமய விழாக்களிலும் அவர் சமூகம் செய்திருந்தால், அவரையே தேவாரம் ஆதியன ஓதும்படி கேட்பது வழக்கம். அப்பொழுது அவர் சபையை உற்று நோக்குவார். வெகுதூரத்திலே தானும், ஒருவர் கேட்கும் முறையிலே அமையாது பராமுகமாயிருந்தால், வேறு கருமத்திலீடுபட்டுக் கொண்டிருந்தால், உபாத்தியாயர் ஓதமாட்டார். ஓதும்படி கேட்டவர்கள் கேட்பவர்கள் ஏற்றவாறு கேட்போரைப் பக்குவப்படுத்திக் கொண்டே உபாத்தியாயரை அணுகி ஓதும்படி வேண்டுதல்

[6-ம் பக்கம் பார்க்க]

# மக்கள் கருத்து

## பாராட்டுக்கு உரியவர்கள்

"யாழ்ப்பாணம் பூபாலசிங்கம் புத்தக நிலையத்திற்கு முன்பாக அநாதரவாக விடப்பட்ட பரி. யோவான் கல்லூரி மாணவரான வி. சண்முகநாதன் என்ற அன்பரின் பெறுமதிமிக்க புதிய சைக்கிள் சில நன்மனம் படைத்தவர்களால் மீண்டும் கிடைக்கப்பெற்றது. இம்மாணவ அன்பர் அவ்விடத்தில் சைக்கிளை வைக்கவும் அங்கு அமைதியின்மை தொடங்கவே சைக்கிளை அவ்விடத்திலேயே விட்டுவிட்டு அவர் ஓடிவிட்டார்.

குறித்த சைக்கிளை ஒரு தனியார் நிறுவனத்தைச் சேர்ந்த எஸ். சிறீஸ்கந்தராஜா, எஸ். ஆனந்தராஜா, ஆர். ஜெகதீஸ்வரன் ஆகியவர்கள் பாதுகாத்து, தேடுதலின்போது புத்தகநிறுவன ஊழியர்களின் உதவியுடன் மறுதினம் ஒப்படைத்தனர். இவர்கள் பாராட்டுக்குரியவர்கள் இவ்வித மனப்பான்மை நம் ஒவ்வொருவருக்கும் ஏற்படவேண்டும்.

க. வாமதேவா
நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

## மீண்டும் நீ கவிஞனய் பிறக்க வேண்டும்

கவியரசு கண்ணதாசன்
மறைந்தனன் என்ற செய்தி
இடியெனக் கேட்டதையோ
இது என்ன மாயந்தானோ
கவிஞனுள் வேந்தனென்றும்
கண்ணனின் தாசன் என்றும்
புவியுளோர் போற்றி நின்றார்
புகழுரை சாற்றி நின்றார்.

ஆழ்ந்த உன் புலமைகண்டு
ஆஸ்தான கவிஞன் பட்டம்
ஈந்தனர் தமிழகத்தோர்
ஈடிலாச் சிறப்புக் கண்டீர்
அரசியல் அறம் செல்வம்
அத்தனை துறைகள் தோறும்
ஆற்றிய கவிகள் கேட்டு
அவனியே வியந்த தையா
அர்த்தமுள்ள இந்து மதத்தின்
அடியனே கண்ணதாசா!

—வ. யோகானந்தசிவம்

## கவியரசு கண்ணதாசன்!

நாஸ்திகனாய் ஆகிப்பின் ஆஸ்திகனாய வாழ்ந்த தமிழ்
ஆஸ்தான கவியரசே உந்தன் ஆன்மாவெலாம்
பல்சுவையும் தத்துவமும் பொங்கிவழிகின்ற
பல்லாயிரம் பாக்களில் நீ என்றும் வாழ்ந்திடுவாய்!

நாயன்மார்கட்டு
ப. மகேந்திரதாசன்

## "காலத்தாற் சாவாக்கவிஞ!"

"தமிழுலகு போற்றிடும் இனிய ஆஸ்தானக்கவி!
அன்னை தமிழாள் புதல்வர் அன்பிதயம்-செந்நீரும்
நேத்திரங்கள் கண்ணீரும் நித்தம் சொரிந்திட....விண்
யாத்திரை சென்றாயோ நவில்?"

தமிழ் வாழு மட்டுமிந்தத் தாரணியில் நீ, நின்
அமிழ்தினினி தாமுன்னை வண்ணத்-தமிழ்ப்படைப்பின்
சந்ததமும் வாழ்வையுண்மைதான்; எனினும்
நின் இடத்திற்
கேற்ற வகை செய்திடலாம் ஈடு!

சி. க. சண்முகநாதன்

# நினைவுகள் சாவதில்லை

(நேற்றைய தொடர்ச்சி)

அடுத்த நாள் பத்திரிகைக்கு ஆசிரிய தலையங்கம் எழுதுவதற்காக "ஈழநாடு" பத்திரிகை பைலைக் கேட்டார் ஹரன் ஐயர். ஆபீஸ் பையன் பைலைக் கொடுத்தான். அவர் கண்ணில் பத்திரிகை பட்டதும் நிச்சயம் தீயில் மிதித்திருப்பார்! "எம். ஜி. ஆர் அமோக வெற்றி" என்ற விசேடபதிப்பும் பைலில் இருந்தது. (இருக்கத்தானே செய்யும்! நான் மறந்து விட்டேன்) இது எனக்குப்பின்னர்தான் தெரிந்தது.

விசேடபதிப்பு வெளியிட்ட துணிச்சல் - மகிழ்ச்சியில், வீம் பீரநடையுடன் அலுவலகத்தில் நுழைந்தேன். நான் வந்ததை ஹரன் ஐயா கண்டிருக்க வேண்டும். ஆபீஸ் பையனை என்னிடம் அனுப்பினார்.

"நீங்கள் செய்தது பெரிய துரோகம் இல்லையா? உங்களை யார் இந்தப் பேப்பர் (விசேட பதிப்பைக்காட்டி) போடச் சொன்னது? நான் செத்தா போயிற்றன்... இப்படிச் செய்வதற்கு என்ன திமிர் இருக்க வேண்டும் உங்களுக்கு... போங்க... என் கண்ணில முழிக்கவேண்டாம்..." சத்தத்தில் பாம்பு கூடத் தோற்றுப் போய்விடும்! இந்த அதிர்ச்சியிலிருந்து விடுபட எனக்கு பல நாட்களானது! இப்படி எத்தனை... எத்தனை! அத்தனையும் பசுமையான நினைவுகள் அந்த நினைவுகள் சாவதில்லை!

❖ ❖

கடைசியாக ஹரன் ஐயாவை நான் 1976-ம் கம்பனையில் சந்தித்தேன். மகளையும் மருமகளையும் சந்திக்க கம்பளைக்கு அவர் சென்றிருந்த போது எதிர்பாராத விதமாக நான் சந்தித்தேன். கம்பளை நகரில் ஓடும் மகாவலி கங்கையின் மணற்பரப்பில் சுமார் இரண்டு மணிநேரம் இருவரும் அமர்ந்திருந்தோம். பழைய விஷயங்களையும் பத்திரிகை நுணுக்கங்களையும் விரிவாகக்கூற தனது ஆரம்பகால பத்திரிகைஅனுபவங்களையும் சுவைபடச் சொன்னார். நானும் எதையோ எல்லாம் சொல்லி, ஆரம்பகாலத்தில் அவரிடம் கண்ட அனுபவத்தையும் எம். ஜி. ஆர். விஷயத்தையும் கூடச் சொன்னேன்.

"அப்படியா அப்படியா..." என்று கேட்டு வாய்விட்டுச் சிரித்தார்! கள்ளம் கபடம் இல்லாத பிள்ளைச் சிரிப்பாகவே எனக்கு அது பட்டது. நெஞ்சிலும் நிலைத்தது.

ஹரன் ஐயாவுக்கும் "ஈழநாடு" பத்திரிகைக்கும் உள்ள எழுத்தின் இணைப்பு மிகவும் இறுக்கமானது, நிலையானது. உண்மையை எழுதுங்கள், நல்லதை எழுதுங்கள் என்றவர் அவர். அவர் கட்டிக்காத்த மரபுதான் "ஈழநாடு"வின் கற்பை இன்றும் பாதுகாத்து வருகிறது. இதனையே நாம் அவருக்கு அஞ்சலியாக செலுத்துகின்றோம்.

(முற்றும்)

## தமிழ்வேதம்

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்வது வழக்கமாயிருந்தது.

கோயிலிலே உபாத்தியாயர் தமிழ் வேதம் ஓத ஆரம்பித்தால், பூசகர் உள்ளிட்ட யாவரும் தம்மைப் பக்குவப்படுத்திக் கொள்வது வழக்கம்.

திருவாசகம், திருக்கோவையார் இறைவன் தமது அருமைத் திருக்கரத்தால் எழுதியருளிய மறைகள். இதனால் தேவாரங்களையும் இறைவன் எழுதிய மறைகள் என்றே கொள்ளலாம்.

இறைவன் தமது திருக்கரத்தால் எழுதியருளிய தமிழ் மறைகள் நான்மறைகள், ஆகமங்கள் என்பவைகளோடு ஒத்தவைகள். அவைகளைப்பராமுகஞ் செய்வது இறைவனை நிராகரிப்பதாகும்.

"நமச்சிவாய வாழ்க" என்று தொடங்கும் சிவபுராணத்தில வரும்.

சொல்லிய பாட்டு என்ற தொடர் சிந்திக்கத்தக்கதாம். இறைவன் சொல்லிய பாட்டு என்றவாறு மணிவாசகர் வாயிலாக இறைவன் சொல்லியபாட்டு என்க.

❖ ❖ ❖

"சைவாலய பூஜையின் பொது அம்சங்கள் அபிஷேகம் அலங்காரம், நைவேத்தியம், தீபாராதனை, அர்ச்சனை, தோத்திரம், தௌர்யத்திரிகம், (நிருத்த கீத வாத்தியங்கள்) என்பன. பூசையின் முழுமையைப் பேணுவதில் இந்த ஏழு அம்சங்களும் ஒரே மாதிரியான முக்கியத்துவமுண்டு. இவற்றில் தோத்திரம் என்ற அம்சத்தில் பதிவாக்கு என்ற மகிமைக்குரிய தோத்திரங்கள் யாவும் இடம்பெற வேண்டியவை. இவ்வகையில் வேதம் ஆகமம், சைவத்திருமுறைகள் என்ற மூன்றும் பிரதானமானவை என்று தொடங்கும் 'தமிழ் வேதம்' என்ற கட்டுரை எழுத்தெண்ணிப்படிக்க வேண்டியது. அக்கட்டுரையின் புத்தக வடிவம் (தமிழ் வேதம்)

ஒவ்வொரு சைவாலயத்திலும், சைவஸ்தாபனத்திலும் இருக்கவேண்டியது. சிந்தனைக்குரியது.

❖ ❖ ❖

சிவ அபராதத்தில் வீழாது புண்ணிய விருத்திக்கு வழி செய்வது தமிழ் வேதம். தமிழ் வேதம் என்ற புத்தகத்தை உபகரித்த ஆசிரியர் பண்டிதர் மு. கந்தையா அவர்களைப் பாராட்டி நன்றி தெரிவிப்போமாக.

— இலக்கிய கலாநிதி
பண்டிதமணி
சி. கணபதிப்பிள்ளை

## சித்திரத்து..

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கின்றதென்பதை நன்கு உணருகிறேன்.

### கம்பன் வர்ணித்த சித்திரத் தாமரை

இதுவரை பத்திரிகாசிரியர் ஹரனைப் பார்த்தோம் இனித் தனி மனிதன் ஹரனைப் பார்ப்போம். தூயவெள்ளை வேஷ்டி, ஜிப்பா, அங்கவஸ்திரம். கையில் குடை, நெற்றியில் திரிபுண்டரம். சாந்தம் தவழும் முகம். சித்திரத்தில் மலர்ந்த செந்தாமரையொத்த முகத்தினன் என்று ராமனைப்போற்றினார் கம்பர். "ராமா உனக்கு முடிசூட்டு விழா" என்ற பொழுதும் "ராமா! நீ காட்டிற்குப்போக வேண்டும்!" என்றபொழுதும் ராமனுடைய முகம் சித்திரத்தில் உள்ள தாமரைபோல் எவ்வித குதூகலமோ, துக்கமோ இன்றி காட்சியளித்ததாம். திரு ஹரனின் முகத்தைப் பார்க்கும் பொழுதெல்லாம் கம்பனின் வர்ணனையே என் ஞாபகத்திற்கு வரும். ஒருசமயம், அமெரிக்கத் தூதராலயத்தார் திரு. ஹரனை மூன்று மாத சுற்றுலாவில் அமெரிக்கா அனுப்ப இருந்தனர் இதை நான் அவரிடம் சொன்னபோது, "அப்படியா! எல்லாம் ஆண்டவன் செயல்!" என்றார் சிலவாரங்கள் கழித்து வேறு காரணங்களால் அவரை அனுப்பமுடியாமற்போய் விட்டது. இந்த ஏமாற்றம் தரும் செய்தியை நானே அவரிடம் சொல்லவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளானேன். "அப்படியா! எல்லாம் ஆண்டவன் செயல்!" என்றார், வழக்கமான புன்சிரிப்புடன். இத்தகைய உணர்ச்சித்துறவினை வள்ளுவர் வகுத்த இல்வாழ்விற்கு இலக்கியமாக விளங்கிய ஒருவரை, எதிர்களாலும் "ஐயோ" அவர் ஒரு அப்பாவி நல்ல மனுஷன்! என்று வாழ்த்தவரை புறக்கண்களினால் இனி மேல் நாம் காணமுடியாது. தக்கார் தகவிலர் என்பது அவரவர் எச்சத்தாற் காணப்படும். திரு. ஹரனின் புத்திரர்களைக் கவனிக்குமிடத்து அவர்களின் தந்தையார் "தக்கார்" என்பதில் ஐயமில்லை.

## தமிழக நூல்களை எம். ஜி. ஆர் யாழ். நூலகத்திற்கு வழங்குவார்

### நெடுமாறன் தகவல்

(யாழ்ப்பாணம்)

அண்மையில் யாழ். நகரில் இடம்பெற்ற வன்முறைச்சம்பவங்களின் போது தீக்கிரையாக்கப்பட்ட யாழ் பொது சன நூலகத்திற்கு தமிழக அரசு வெளியிட்டுள்ள நூல்களையும் அங்குள்ள பல்கலைக் கழகங்களின் வெளியீடுகளையும் திரட்டி அனுப்ப தமிழக முதல்வர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் இணக்கம் தெரிவித்துள்ளார்.

அண்மையில் இலங்கைவந்து திரும்பிய தமிழ்நாடு திரும்பிய தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் தலைவர் திரு. பீ நெடுமாறன் யாழ். மேயர் திரு. இராசா விசுவநாதனுக்கு எழுதியுள்ள கடிதத்தில இத்தகவலைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையிலிருந்து தமிழகம் திரும்பியதும் யாழ் நூல் நிலைய விஷயம் குறித்து நாம் திரு. இராமச்சந்திரனுடன் பேச்சுநடத்தியதாகவும் அப்போதே அவர் நூல்களைத் திரட்டி யாழ். நூலகத்திற்கு அனுப்ப இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் திரு. நெடுமாறன் தமது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

தமது கட்சியும் தமிழகத்தில் நூல்களைத் திரட்டி வருவதாகவும் அவர் தமது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

(இ)

## இராணுவ

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கைது செய்யப்பட்டவர்களாவர்.

ஆனந்தன், ரஞ்சன் ஆகிய இருவரும் தலைமறைவாகிவிட்டதாகவும் இவர்களை தேடி பொலிஸார் வலைவிரித்துள்ளதாகவும் கூறப்பட்டது.

முன்னாள் இராணுவ வீரரை அல்லது அவரின் இராணுவ உடையைப் பயன்படுத்தியே குறிப்பிட்ட கோஷ்டியினர் கொள்ளையடிக்கப் புறப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(மா)

## முதலாவது...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

81 ஜூலை 14ம் திகதி இரவு நீர்வேலி கரந்தனில் 1,400 ரூபா ரொக்கப் பணமும், தங்கச் சங்கிலியும் கொள்ளையடித்தது; கந்தையா இராசலிங்கம் கொலை செய்யப்பட்டது தொடர்பாக சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

மா

## சங்கிலி அறுத்த

(1ம் பக்கத் தொடர்ச்சி)

காரைநகர் புதுறோட்டைச் சேர்ந்த நாகலிங்கம் கைம்பெண் வள்ளியம்மை என்பவரிடம் அதே றோட்டில் வைத்து அவரது ஐந்துபவுண் சங்கிலியைப் பறித்துக் கொண்டு ஓடமுயன்ற காரைநகரைச் சேர்ந்த தம்பையா சண்முகராசா, வவுனியாவைச் சேர்ந்த சந்திரசேகரம் ஆகிய இருவரையும் குறிப்பிட்ட பெண் சத்தம் போட்டதை யடுத்து அங்கு கூடிய மக்கள் பிடித்து காரைநகர் வடக்கு கிராமசேவையாளர் திரு. க. குலசேகரத்தின் மூலம் ஊர்காவற்றுறை பொலிசாரிடம் ஒப்படைத்தனர் சங்கிலியும் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டது.

(இ)

★ HONDA கண்காட்சி
★ அதிர்ஷ்டச்சீட்டிழுப்பு
★ கலைவிழா

தவிர்க்கமுடியாத காரணங்களால் 24-10-81 வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவிருந்த எமது நிகழ்ச்சிகள் நவம்பர் 28ம் திகதி சனிக்கிழமை நடைபெறும்.

கன்ரேபியா கல்வி நிறுவனம்
166, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
கன்ரேபியா லிமிற்றெட்,
21, மெயின்வீதி, யாழ்ப்பாணம்,
1277

ஹோம் பிறுன்ஸ்
லிமிட்
"HOME MATE"
ஹோம் மேற்
(MADE IN JAPAN)
1/3 ஹோஸ் பவர்
மணிக்கு 1000 கலன்
நீர் இறைக்கும்
மின்சார இயந்திரம்
விற்பனைக்குண்டு
வியாபாரிகளுக்கு கழிவு உண்டு.
விலை ரூ. 1600/-
விபரங்கட்கு:
ஹோம் பிறுன்ஸ் லிமிட்,
82, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 8310

தீபாவளி மலிவு விற்பனை!
27-10-81 வரை
சகல துல்டெக்ஸ் புடவை
வகைகளுக்கும் 10% கழிவுண்டு.
இன்றே
விஜயம் செய்யுங்கள்
துல்கிரிய நெசவாலையின்
யாழ். விற்பனை நிலையம்
லேடன்காமென்ஸ்
86, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 330
(1275)

## மரண அறிவித்தல்

### செல்வி வாசுகி பாலசிங்கம்

கந்தர்மடம் பழனி வீதி 105ம் இலக்கத்தைச் சேர்ந்த செல்வி வாசுகி பாலசிங்கம் காலமானார். இவர் இளைப்பாறிய புகையிரதநிலைய அதிபர் சாந்தி கேசு பாலசிங்கம், அன்னபூரணம் ஆகியோரின் அன்பு மகளும், நந்தபாலன் (இங்கிலாந்து), யசோதாபாலன் (இங்கிலாந்து), நீரஜா (வேம்படி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார். அன்னாரது ஈமச்சடங்கு நாளை வெள்ளிக்கிழமை (23-10-81) காலை 9 மணியளவில் கோக்குவில் மயானத்தில் நடைபெறும்.
1279

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சினன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள "ஈழநாடு" லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதி, 803-ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில 1981 ஆம் ஆண்டு அக்டோபர் 22-ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper. The General P. O. Sri Lanka Regd.Q. B. 100236/81, P. O. Box 49. Jaffna. தொலைபேசி 7707, 389, 8126.